**அனுப்புனர்:**
மா.முருகேசன்,
த/பெ.த.மாரிமுத்து,
2/39, மேற்குத்தெரு,
வெள்ளாரம்,
தூத்துக்குடி - 628 401.

**பெறுநர் :**
பள்ளிக்கல்வி இயக்குநர்,
டி.பி.ஐ வளாகம்,
கல்லூரி சாலை,
சென்னை - 600 019.

**பொருள் :** தகவல் அறியும் உரிமைச்சட்டம்(RTI ACT 2005) ன் கீழ் பெறப்படும் தகவல்களை நடைமுறைப்படுத்தாத அலுவலர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்கள் மேல் நடவடிக்கைகள் எடுத்தல் - தெடர்பாக.

**பார்வை :** 1. மாநிலம் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை-06, அவர்களின் ந.க.எண் 25235/F2/2023 நாள் : 11.08.2023
2.மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் நீதியரசர் S.M.Subramaniam ஆணை நாள் : 14.10.2019 வழக்கு எண் WP NO. 16108 of 2019.
3.தமிழ்நாடு மாநில தகவல் ஆணையம் வழக்கு எண் SA.11299/D/2021 விசாரணை நாள் : 19.11.2021
4.பள்ளிக்கல்வி ஆணையரகம், சென்னை, ந.க.எண் 56248/F/RTI/2021 நாள் : 25.11.2021
5.தமிழ்நாடு அரசுப்பணியாளர் நடத்தை விதிகள் - 1973 விதிஎண் : 20(3(i))

**ஐயா/ அம்மையீர்:-**

வணக்கம் பார்வை 1-ல் "என்னும் எழுத்தும் வகுப்பு 1 முதல் 3 வரை பாடக்குறிப்பினை (Lesson Plan) கணிணியில் தட்டச்சு செய்து நகல் எடுத்து வைத்துக்கொள்ளலம் என தகவல் வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 2 யில் அரசு நிருவாகத்தில் வெளிப்படைத் தன்மையை கொண்டு வர பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட தகவல் அறியும் உரிமைச்சட்டம் (RTI ACT 2005) ஐ எவராலும் ஒதுக்கி வைக்க முடியாது எனவும், பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டமே அனைத்து துறையின் விதிகளை விட மேலோங்கி இருக்கும் என நீதியரசர் தீர்ப்பளித்துள்ளார்.

பார்வை 3 மற்றும் 4 ன்படி தகவல் பெறும் உரிமைச்சட்டம் (RTI ACT 2005) குறித்து தெளிவான விளக்கத்தினை பள்ளிக்கல்வி ஆணயரகம், அனைத்து மாவட்ட முதன்மை மாவட்டக் / வட்டாரக் / கல்வி அலுவலர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

பார்வை 5 ன் படி அரசுப்பணியாளர் எவரும் தன்னுடைய தேர்ந்த முடிவின்படி செயற்படக்கூடாது.

தமிழ்நாடுஅரசு, பள்ளிக்கல்வித்துறையின் கீழ் செயல்படக்கூடிய அனைத்து தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர்களில் சிலர் அடிப்படை அறிதல் கூட

இல்லாமல் தகவல் அறியும் உரிமைச்சட்டம் RTI ACT (2005) விதிமுறைகள் பற்றி தெளிவு இல்லாமலும், பார்வை1,2,3,4,5 நடைமுறைப்படுத்த வேண்டியது தனது கடமையும் பொறுப்பும் ஆகும் என்பதைக்கூட அறியாமல் தவறான முறையற்ற அல்லது திசை திருப்பக்கூடிய செயல்களை செய்து வருகிறார்கள்.

பார்வை 1 "எண்ணும் எழுத்தும் வகுப்பு 1 முதல் 3 வரை பாடக்குறிப்பினை (Lesson Plan) கணினியில் தட்டச்சு செய்து நகல் எடுத்து வைத்தக்கொள்ளலாம் " என்ற மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை - 06 அவர்களின் ந.க.எண் 25235/F2 /2023 நாள் : 11-08-2023 உத்தரவினை செயல்படுத்தாத தமிழ்நாடு அரசு, பள்ளிக்கல்வித்துறையின் கீழ் செயல்படக்கூடிய அனைத்து தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் மேல்

**தமிழ்நாடு குடிமுறை அரசுப்பணிகள்**
**(ஒழுங்குமுறையும் மேல்முறையீடுகளும்) விதிகள்**
**T.N.Civil Service ( Discipline and Appeal) Rules**

- பொது ஊழியரால் முறையாக அறிவிக்கப்பட்ட ஒரு கட்டளைக்குக் கீழ்ப்படியாமை.
- சட்டப்படி சாட்சிமாக பெறத்தக்க சாற்றுரையை அலட்சியம் செய்தல்.
- கேடு விளைவிக்கும் எண்ணத்துடன் சட்டத்தின் உத்தரவுக்குக் கீழ்ப்படியாதிருக்கின்ற அரசு ஊழியர்.
- உயர்அலுவலர்கள் வழங்கிய எழுத்துப்பூர்வமான அறிவுரைகளை உதாசீனம் செய்தல் அல்லது செயல்படுத்தாமை.
- அரசு நிருவாகத்தை இக்கட்டான சூழலில் வைப்பது போன்ற எவ்வித செயலிலும் அரசு ஊழியர் ஈடுபடக்கூடாது.

போன்ற பிரிவுகளின் படி கடுமையான தொடர் நடவடிக்கைகள் எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி

இடம்: வெள்ளாரம்
நாள் :21.10.2023

இப்படிக்கு,
[signature] 21/10/23

/பதிவஞ்சலில்/

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை – 06

அனுப்புநர்
மேல் முறையீட்டு அலுவலர் மற்றும்
இணை இயக்குநர் (நிருவாகம்)
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை – 06.

பெறுநர்
திரு. மா.முருகேசன்,
த/பெ. த. மாரிமுத்து,
2/39, மேற்குத் தெரு, வெள்ளாரம்,
தூத்துக்குடி மாவட்டம் – 628 401.

ந.க. எண். 25235/F2/2023 நாள். 11.08.2023.

......

ஐயா,

பொருள் : தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–இன்படி, தூத்துக்குடி மாவட்டம், திரு. மா.முருகேசன் என்பாரின் மேல்முறையீடு – தகவல் அளித்தல் – தொடர்பாக.

பார்வை தூத்துக்குடி மாவட்டத்தை சார்ந்த திரு. மா. முருகேசன், என்பாரது மனு நாள்:24.07.2023.

.......

பார்வையில் காணும் மனுவில், தகவல் அறியும் உரிமைச் சட்டம்–2005–இன் கீழ் திரு. மா. முருகேசன் என்பார் கோரிய தகவல் பின்வருமாறு அளிக்கப்படுகிறது.

| கோரப்பட்ட தகவல் | தகவலுக்கான பதில் |
| --- | --- |
| எண்ணும் எழுத்தும் வகுப்பு 1 முதல் 3 வரை பாடக்குறிப்பினை (Lesson Plan) கணினியில் தட்டச்சு செய்து நகல் எடுத்து வைத்துக் கொள்ளக்கூடாது என்று அரசாணைகள், செயல்முறைகள் இருப்பின் அதன் நகல் கோரப்பட்டுள்ளது | எண்ணும் எழுத்தும் வகுப்பு 1 முதல் 3 வரை பாடக் குறிப்பினை (Lesson Plan) கணினியில் தட்டச்சு செய்து நகல் எடுத்து வைத்துகொள்ளலாம். ஆனால், இதற்கான அரசாணைகள், செயல்முறை ஆணைகள் ஏதும் இந்நிறுவனத்தில் இல்லை என்ற விவரம் மனுதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது. |

மேல் முறையீட்டு அலுவலர்
மற்றும் இணை இயக்குநர் (நிருவாகம்)
11/8/23

11/8/23